திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டம்,
துரிஞ்சாபுரம் பஞ்சாயத்து யூனியன்,
வடஆண்டாப்பட்டு கிராம ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : **திரு. பா. மோகன் தலைவர்**

எண்: 1/2024. நாள் : 21-6-2024

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு – திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், வடஆண்டாப்பட்டு ஊராட்சி கிராம சர்வே எண்: **78/3A1, 78/3B1A** விஸ்தீரணம் **1** ஏக்கர் **37** செண்டு பரப்பில் உள்ள குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில்நுட்ப இசைவு அளிக்கப்பட்டது. உள்ளாட்சி மூலம் இறுதி ஒப்புதல் அளித்தல் – சார்பு.

பார்வை : நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவண்ணாமலை மாவட்டம் அவர்களின் நடவடிக்கை இணையதள விண்ணப்ப எண்: N6EQI3KA/2024 தி.மலை நாள் : 12-03-2024

உத்திரவு :

பார்வையில் காணும் நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவண்ணாமலை மாவட்டம் அவர்களின் உத்திரவின்படி திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்னியம், வடஆண்டாப்பட்டு கிராம சர்வே எண்: **78/3A1, 78/3B1A** **1** ஏக்கர் **37** செண்டும் பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில்நுட்ப இசைவு அளிக்கப்பட்டதை தொடர்ந்து அரசாணை எண்: 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை 04-05-2017-ன்படி வடஆண்டாப்பட்டு ஊராட்சி அமைப்பு நில பயன் மற்றும் கட்டணம் 3 விழுக்காடு தொகை ரூ. 23028/- (ரூபாய் இருபத்து மூன்றாயிரத்து இருபத்து எட்டு மட்டும்) Scrutiny கட்டணம் ரூ. 30000/- மற்றும் சாலை பராமரிப்பு கட்டணம் ரூ. 10356/- ஆக மொத்தம் ரூ. 63384/- (ரூ. அறுபத்து மூன்றாயிரத்து முன்னூற்று எண்பத்து நான்கு மட்டும்) ~~வேங்கிக்கால்~~ வடஆண்டாப்பட்டு பஞ்சாயத்து வங்கி கணக்கில் செலுத்தப்பட்டது. தொடர்ந்து மனை எண்கள் **1** முதல் **30** வரை உள்ள மனைகளுக்கு தொழில் நுட்பஇசைவு அளிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கான வரைபடத்தின் உட்பிரிவுக்கும் உள்ளாட்சிகள் மூலம் இறுதி ஒப்புதல் அளித்த பஞ்சாயத்து தீர்மான எண் : 90. நாள் : 10-6-24 இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

ஊராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய சாலைகள் மற்றும் நீர் தேக்கதொட்டி கட்டும் இடம் மற்றும் மின்சார வாரியத்திற்கு ஒதுக்கிடு **போன்ற இடங்கள்** பத்திரபதிவு எண்: **5575/24** நாள்: **20-04-2024** , **5733/2024** நாள்: **24-4-2024** கிராம ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் பெயரில் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. அதை தொடர்ந்து திருவண்ணாமலை நகர ஊரமைப்பு உதவி இயக்குனர் திருவண்ணாமலை **மாவட்டம் ம.ந.ஊ.உ.இ. (தி.மலை)** எண்: **126/2024** என எண்ணிப்பட்ட தொழில் நுட்ப **ஒப்புதல்** வழங்கப்பட்டு வடஆண்டாப்பட்டு ஊராட்சி மன்றத்தால் **ஆனந்தம் நகர் - II** பெயரிடப்பட்ட **உத்தேச 30** மனைகளுக்கு வடஆண்டாப்பட்டு ஊராட்சி மன்றத்தால் ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

இணைப்பு :
1. பார்வை 1-ல் அலுவலக கடித நகல்
2. அரசு வழிகாட்டி மதிப்பு
3. உரிய கட்டணம் செலுத்திய வங்கி ரசீது நகல்

தலைவர்,
ஊராட்சி மன்றம்,
வடஆண்டாப்பட்டு